بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 31/03/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் இறைஞானமிக்க வழிகாட்டல்களின் ஒளியில், திருக்குர்ஆனின் சிறப்புகள், தகுதி, தரம் மற்றும் மகத்துவம் பற்றிய எடுத்துரைப்பு**

ஒவ்வோர் அஹ்மதியையும் எல்லாத் தீங்கிலிருந்தும் காப்பாற்றுவதற்காகவும் சீர்திருந்த தகுதியற்ற மக்களைப் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவதற்காகவும் அருளுக்குரிய ரமலானில் சிறப்பான துஆக்கள் செய்யுமாறு வலியுறுத்தல்

أَشۡهَدُ أَنۡ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۝ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۝

தற்போது நாம் ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம். இது எத்தகைய மாதம் என்றால், இதில் ஓர் ஆன்மிக சூழல் உருவாகி விடுகிறது. நோன்புகளுடன், இறைவணக்கங்களின் பாலும் அதிக கவனம் ஏற்படுகிறது. திருக்குர்ஆனை ஓதுவது மற்றும் கேட்பதன் பால் அதிக கவனம் ஏற்படுகிறது. நோன்புகளின் உண்மையான பலனைப் பெற வேண்டும் எனில், திருக்குர்ஆனை ஓதுவதன் பால் அதிக கவனம் ஏற்பட வேண்டும்.

ரமலானுக்குத் திருக்குர்ஆனுடன் சிறப்பான தொடர்பு உள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ هُدًی لِّلنَّاسِ அதாவது, ரமலான் மாதம் திருக்குர்ஆன் இறக்கப்பட்ட மாதம் ஆகும். (அந்தக் குர்ஆன்) எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதாக (அனுப்பப்பட்டு) உள்ளது.

ரமலான் 24 ஆம் தேதி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முதல் வஹீ இறக்கப்பட்டது என்றும் சில நம்பகமான அறிவிப்புகள் கூறுகின்றன. ஒவ்வொரு ரமலானிலும் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் சேர்ந்து ஒருமுறை திருக்குர்ஆனை முழுமையாக ஓதி முடித்து வந்தார்கள். கடைசி வருடம் இரண்டு முறை முழுமையாக ஓதி முடிக்கப்பட்டது.

நாமும் இந்த மாதத்தில் குறிப்பாக, திருக்குர்ஆனை ஓதுவது, அதன் விளக்கவுரையைப் படிப்பது, கேட்பது ஆகியவற்றின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். MTA விலும் திருக்குர்ஆன் தர்ஸ் வருகிறது. அதையும்

கேட்க வேண்டும். நாம் திருக்குர்ஆனை ஓதுவதுடன், அதன் மொழியாக்கம் மற்றும் விளக்கவுரைப் படித்தால் தான் நம்மால் அதில் எடுத்துரைக்கப்பட்டுள்ள அந்தக் கட்டளைகளின் முக்கியத்துவத்தைப் புரிய முடியும். அவற்றை நம் வாழ்வின் அங்கமாக்க முடியும். நம் வாழ்வைத் திருக்குர்ஆனின் போதனைகள் படி அமைத்துக் கொள்ள முடியும். நாம் அல்லாஹ்வின் அருள்களை ஈர்க்கக்கூடியவர்களாக ஆக முடியும்.

எனவே, நாம் ரமலானின் உண்மையான அருள்களைப் பெற வேண்டும் என்றால், திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் அதில் ஆழ்ந்து கவனம் செலுத்துவதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வழிகாட்டல்களை மீண்டும் மீண்டும் படிக்க வேண்டிய தேவையுள்ளது. அப்போதுதான் நம்மால் சரியான முறையில் திருக்குர்ஆனின் போதனைகள் பற்றிய புரிதலைப் பெற முடியும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** வல்ல இறைவனின் நுட்பங்களும் கட்டளைகளும் இரு வகைப்படும். சில நிரந்தரமானவையாக, என்றென்றைக்குமானவையாக இருக்கும். சில (கட்டளைகள்) குறிப்பிட்ட நேரத்தின், அதாவது, தற்காலிக தேவையின் அடிப்படையில் பிறப்பிக்கப்படுகின்றன. எனினும், இவற்றிலும் இவற்றிற்கென ஒரு நிரந்தரத் தன்மை இருக்கிறதுதான். உதாரணமாக, பயணத்தில் தொழுகை மற்றும் நோன்பு தொடர்பாக வேறு கட்டளைகள் உள்ளன. பயணம் இல்லாத நேரத்தில் வேறு கட்டளைகள் உள்ளன. பயணத்தில் தொழுகையை ஜம்உ செய்வதற்கும் கஸ்ர் செய்வதற்கும் அனுமதி உள்ளது. ஆனால், சாதாரண நேரத்திலோ முழுமையாக தொழ வேண்டும்.

**அன்னார் (அலை) கூறுகிறார்கள்:** தவ்ராத் மற்றும் இஞ்சீலின் கட்டளைகள் தற்காலிக தேவைகளுக்கு ஏற்ப இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எந்த ஷரீஅத்தை, திருமறையைக் கொண்டு வந்தார்களோ அது நிரந்தரமான என்றென்றைக்குமான ஷரீஅத் ஆகும். அதில் கூறப்பட்டுள்ள அனைத்தும் முழுமையானதும் நிறைவானதும் ஆகும். திருக்குர்ஆன் நிரந்தரமான சட்டமாகும். திருக்குர்ஆன் வராமல் இருந்திருந்தாலும் தவ்ராத்தும் இஞ்சீலும் ரத்தாகியிருக்கும். ஏனெனில், அவை நிரந்தரமான, என்றென்றைக்குமான சட்டமாக இருக்கவில்லை. ஆனால், திருக்குர்ஆனின் போதனைகளோ முழுமையானவை. அதன் கட்டளைகளும் வழிகாட்டல்களும் ஒவ்வொரு காலத்திற்கும் ஆகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது வருகையின் நோக்கத்தையும் திருக்குர்ஆன் நிரந்தரமான ஷரீஅத் ஆக இருப்பது பற்றியும் கூறுகிறார்கள்:** நான் தோன்றியதன் அசல் நோக்கமும் எனது வருகையின் குறிக்கோளும் இஸ்லாத்தைப் புதுப்பிப்பதும் அதற்கு ஆதரவு அளிப்பதும் மட்டுமே ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஷரீஅத்தும் நுபுவ்வத்தும் நிறைவு பெற்று விட்டது. இப்போது எந்த ஷரீஅத்தும் வர முடியாது. திருக்குர்ஆன் இறைமறைகளில்

இறுதியானது. அதில் இப்போது ஒரு புள்ளியோ சுழியோ கூடவோ குறையவோ இடமில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பரக்கத்துகள், அருள்கள் மற்றும் திருக்குர்ஆனின் போதனைகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றின் கனிகள் முடிவு பெற்று விடவில்லை. அவை எல்லாக் காலத்திற்கும் புத்தம் புதிதாக உள்ளன. அந்த அருள்கள் மற்றும் பரக்கத்துகளுக்கு சான்றளிப்பதற்காகவே இறைவன் என்னை நிறுத்தினான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து செய்தி பெற்று அனைவரையும் பார்த்து, قُلۡ يٰۤاَيُّهَا النَّاسُ اِنِّىۡ رَسُوۡلُ اللّٰهِ اِلَيۡكُمۡ جَمِيۡعَا **(அல்அஃராஃப்: 159)** என்று கூறினார்கள். **பொருள்: நீர் கூறுவீராக! மனிதர்களே! நிச்சயமாக நான் உங்கள் அனைவரையும் நோக்கி அனுப்பப்பட்டுள்ள அல்லாஹ்வின் தூதர் ஆவேன்.** எனவே, அவ்வப்போது இருந்து வந்துள்ள அந்தப் போதனைகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக திருக்குர்ஆன் இருந்திருக்க வேண்டிய அவசியம் இருந்தது. மேலும், விண்ணிலிருந்து பல்வேறு நபிமார்கள் மூலமாக பூமியில் வசிப்பவர்களுக்கு எட்டவைக்கப்பட்டு வந்த அந்த அனைத்து உண்மைகளையும் தன்னுள் கொண்டிருக்க வேண்டியது அவசியமாக இருந்தது.

திருக்குர்ஆன் மனித குலம் முழுவதையும் கருத்தில் கொண்டிருந்தது. எந்தவொரு குறிப்பிட்ட சமுதாயத்தை நாட்டை அல்லது காலத்தை மட்டும் கொண்டிருக்கவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையால், 'நான் முழு உலகிற்கும் அல்லாஹ்வின் தூதராக அனுப்பப் பட்டுள்ளேன்' என்று அறிவிப்பு செய்தது, திருக்குர்ஆன் முழு உலகிற்கும் நேர்வழிக்கான வழிவகையாகும் என்பதற்கும் சான்றாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆன் நுட்பஞானம் ஆகும். நிரந்தரமான ஷரீஅத் ஆகும். எல்லாப் போதனைகளின் கருவூலமாகும். இவ்வாறு திருக்குர்ஆனின் முதல் அற்புதம் உயர்தர போதனையாகும். இரண்டாவது அற்புதம் அதன் மகத்துவமிக்க முன்னறிவிப்புகள் ஆகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மக்கத்து வாழ்வு முழுவதும் முன்னறிவிப்புகளால் நிறைந்துள்ளது.

பிறகு, 1300 ஆண்டுகளுக்குப் பிறகு, உருவாகவிருந்த இயக்கத்தைப் பற்றிய, அந்த நேரத்தின் தடயங்கள் மற்றும் அடையாளங்கள் பற்றிய முன்னறிவிப்புகள் எந்த அளவு மகத்துவம் மிக்கவையாகவும் நிகரற்றவையாகவும் உள்ளன. அதாவது, வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தைப் பற்றிய முன்னறிவிப்புகள். இப்போது வரை மிகவும் கம்பீரமான முறையில் நிறைவேறுகின்றன. உலகின் எந்த வேதத்தாலும் இந்த முன்னறிவிப்புகளோடு போட்டி போட முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனில் ஆங்காங்கே அறிவுடனும், புரிதலுடனும், ஆழ்ந்து

சிந்தித்தும், ஈமானுடன் செயல்படுங்கள் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனுக்கும் மற்ற வேதங்களுக்கும் இதுதான் வித்தியாசம் ஆகும். வேறு எந்த வேதமும் தனது போதனையை அறிவு, ஆழ்ந்து சிந்தித்தல் மற்றும் சுதந்திரமாக ஆராய்ந்து பார்த்தல் என்ற விஷயத்திற்கு முன்னால் இடுவதற்குத் துணியவே இல்லை. திருக்குர்ஆன் ஒரு பாதுகாக்கப்பட்ட மறையாகும்.

**அல்லாஹ் கூறுகிறான்:** நிச்சயமாக இது ஒரு கண்ணியத்திற்குரிய குர்ஆன் ஆகும். இதன் இருப்பு காதிதங்கள் வரை மட்டுமே வரையறுக்கப்பட்டு இருக்கவில்லை. மாறாக, அது மறைந்துள்ள ஒரு வேதத்தில் உள்ளது. அதை இயல்பின் மறை என்கிறோம். அதன் போதனைகள் அழிந்து போகக்கூடிய (கட்டுக்) கதைகள் அல்ல. மாறாக, எவர் அதைப் புரிவாரோ, அதன்படி செயல்படுவாரோ அவர் அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவார். அதன் தாக்கங்களும் அதன் ஆழங்களும் தூய மக்களுக்கே திறக்கின்றன. அதற்காக தூய மக்களுடன் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே அந்த நபர் ஆவார்கள். அன்னார் அல்லாஹ்விடமிருந்து ஞானம் பெற்று எடுத்துரைத்தவற்றை நாம் பார்க்க வேண்டும். அதை ஆழ்ந்து சிந்திக்கவும் வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** திருக்குர்ஆனுக்கு 'ஸிக்ர்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், அது மனிதனின் உட்புற ஷரீஅத்தை நினைவூட்டுகிறது. அது பல்வேறு ஆற்றல்கள் வடிவில் மனிதனுக்குள் வைக்கப்பட்டுள்ளது. இரக்கம், தியாகம், வீரம், கண்டிப்பு, கோபம், சிக்கனம் முதலியவை. சுருக்கமாக, இயல்பு அகத்தில் வைத்தவற்றைத் திருக்குர்ஆன் நினைவூட்டியது. அல்லாஹ் கூறினான்: திருக்குர்ஆனை கவனமாக ஆழ்ந்து சிந்தியுங்கள். அதன் படி செயல்படுதல், உங்களுக்கு மனித இயல்பின் உயர்த்தரத்தைக் காட்டும்.

எனவே, இந்தக் கண்ணோட்டத்தில் நாம் திருக்குர்ஆனைப் படிக்கவும் புரியவும் வேண்டும். இன்றைய நாள்களில், சுதந்திரம் என்ற பெயரில் குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் சிந்தனைகளில் நஞ்சு விதைக்கப்படுகிறதே அதிலிருந்து நம்மால் தப்ப முடியும். நாம் ஜமாஅத் இலக்கியங்களையும் திருக்குர்ஆனின் விளக்கவுரைகளையும் படித்தால், பெற்றோர்களால் பிள்ளைகளின் கேள்விகளுக்கு பதிலும் அளிக்க முடியும்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'மக்கள் திருக்குர்ஆனை ஓதுவர்; ஆனால், அது அவர்களின் தொண்டைக்குக் கீழ் இறங்காது' என்று முன்னறிவித்திருந்த அந்தக் காலம் இப்போது வந்து விட்டது. இதையே நாம் பார்க்கிறோம். எண்ணற்ற காரீமார்கள் இருக்கிறார்கள். ஓதக்கூடியவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆனால், அமல் ஏதும் இல்லை.

முஸ்லிம்கள் அறிவால் செயல்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவர்கள் இறைவன் அனுப்பிய அந்த நபரின் பக்கம் கவனம் செலுத்த

வேண்டும். அவர் கூறுவதைக் கேட்க வேண்டும். தமது அக நிலையைப் பார்க்க வேண்டும். காலத்தின் தேவையைப் பார்க்க வேண்டும். முஸ்லிம்களின் பொதுவான நிலையைப் பார்க்க வேண்டும். வெளிப்புற மார்க்கத் தீர்ப்புகளில் மட்டும் அழுத்தம் கொடுத்து இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யக்கூடாது. திருக்குர்ஆனின் உண்மைத் தன்மையைப் புரிய வேண்டும்.

எவ்வாறாயினும், அஹ்மதிகளான நாம், 'நாம் எந்த அளவு திருக்குர்ஆனின் போதனைகளின் உண்மைத் தன்மையைப் புரிகிறோம்; அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்கிறோம்; அல்லது செய்து கொண்டிருக்கிறோம்' என்று எப்பொழுதும் நம்மை சுய ஆய்வு செய்து கொண்டே இருக்க வேண்டும்.

இன்றை நாள்களில் சமூக ஊடகங்களில் சில சின்னச் சின்ன நிகழ்ச்சிகள் அல்லது கிளிப்கள் மூலம் மக்களுக்கு இஸ்லாத்தின் அடிப்படை போதனை மற்றும் வரலாறே தெரியவில்லை என்பது தெரியவருகிறது. ஆக, மவ்லவி கூறுவதன் அடிப்படையில், தூதுத்துவத்தின் கண்ணியம் (காத்தல்) அல்லது திருக்குர்ஆன் அல்லது சஹாபாவின் பெயரில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக முழக்கம் இடுவதற்கும் இழப்பு ஏற்படுத்துவதற்கும் முயற்சி செய்யப்படுகிறது.

**வங்காளதேசத்தில் இருந்து ஒருவர் எனக்கு எழுதினார்:** 'மக்கள் அணிவகுப்பு வந்த போது, அவர்கள் தாக்குதல் தொடுத்த போது, ஓர் இளைஞன் கல் எறிந்து கொண்டிருந்தான். அவனிடம் நம் அஹ்மதி சகோதரர் ஒருவர், 'இது திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளதா? இது இஸ்லாத்தின் போதனையா? நாங்களோ கலிமா கூறக்கூடியவர்கள் ஆவோம்' என்று கூறினார். அவன் உடனடியாக கல்லைக் கீழே போட்டு விட்டான். ஆக, இத்தகைய மக்கள் மவ்லவிகள் தூண்டிவிடுவதற்கு ஏற்ப செயலாற்ற ஆரம்பித்து விடுகின்றனர். அல்லாஹ் இந்தத் தீயவர்களின் தீங்கிலிருந்து நம்மைப் பாதுகாத்து வைப்பானாக! நாம் இந்த ரமலானிலும், (ரமலானுக்குப்) பிறகும் திருக்குர்ஆனைப் புரியக்கூடியவர்களாக, கற்றுக் கொள்ளக் கூடியவர்களாக மற்றும் அதன் படி அமல் செய்யக்கூடியவர்களாக ஆவதற்கு நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* ரமலானில் துஆக்கள் செய்வதன் பக்கமும் சிறப்பான கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் எல்லா இடத்திலும் ஒவ்வோர் அஹ்மதியையும் எல்லாத் தீங்கிலிருந்தும் காப்பாற்றுவானாக! எவர்கள் அல்லாஹ்வின் பார்வையில் சீர்திருந்த தகுதியற்றவர்களோ அவர்களை அவன் படிப்பினைக்குரிய அடையாளமாக ஆக்குவானாக! இவ்வாறு மற்ற மக்கள் அல்லாஹ்வின் கட்டளைகள் படி அமல் செய்யக்கூடியவர்களாக ஆவார்களாக! உலகிற்காக பொதுவாகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் போர் எனும் பேராபத்திலிருந்து உலகைக் காப்பாற்றுவானாக! (ஆமீன்)

*ஜுமுஆ பேருரையின இறுதியில், ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இயக்கத்தின் முபல்லிஃக் **மவ்லானா முனவ்வர் அஹ்மத் குர்ஷீத் சாஹிப்**, இயக்கத்தின் முரப்பி பாக்கிஸ்தானைச் சேர்ந்த **இக்பால் அஹ்மத் முனீர் சாஹிப்** ஆகியோரது வஃபாத்தால் அவர்களது நற்குறிப்பையும் அவர்களது ஜமாஅத் தொண்டுகளையும் பற்றி கூறிய பிறகு, கூறினார்கள்:*

மூன்றாவது குறிப்பு, காதியானைச் சேர்ந்த தர்வேஷ் மர்ஹூம் மியான் அப்துல் அஸீம் சாஹிப் அவர்களின் துணைவியார் **சய்யிதா நுஸ்ரத் ஜஹான் பேகம் சாஹிபா** அவர்களுடையது. இவர்கள் தர்வேஷிய காலகட்டத்தில் ஒடீஷா மாநிலத்திலிருந்து திருமணம் ஆகி வந்த முதல் பெண்மணி ஆவார்கள். மர்ஹூமா தம் கணவருடன் தர்வேஷிய காலகட்டத்தைப் பொறுமையுடனும் நன்றியுடனும் கழித்தார்கள்.

தொழுகை மற்றும் நோன்பை மிக முறையாகப் பேணக்கூடிய, துஆக்கள் செய்யக்கூடிய, நற்பண்பு கொண்டிருந்த மற்றும் கலப்பற்ற பெண்மணியாக இருந்தார்கள். முறையாக திலாவத் செய்யக்கூடியவராகவும் மற்றவர்களுக்குத் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுக்கக்கூடியவராகவும் இருந்தார்கள். பல குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் திருக்குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். படைப்பினங்களுக்குத் தொண்டாற்றும் உணர்வு வெளிப்படையாக தெரிந்தது. காதியானில் பெண்களுக்கான கஃபனிடும் சந்தர்ப்பத்தில் இவர்கள் மிகவும் தொண்டாற்றி வந்தார்கள். காலத்தின் கலீஃபாவுடன் சிறப்பான தொடர்பு இருந்தது.

இவர்கள் பின்விட்டுச் சென்றவர்களில், நான்கு மகன்களும் ஒரு மகளும் உள்ளார்கள். இவர்கள் குர்ஷீத் அன்வர் சாஹிப் அவர்களின் இரண்டாவது தாயாராக இருந்தார்கள். மேலும், அஹ்மதிய்யத்தின் வரலாற்றை எழுதிய மர்ஹூம் தோஸ்த் முஹம்மத் ஷாஹித் அவர்களின் சாச்சியாகவும் (தந்தையின் சகோதரரின் துணைவியாராகவும்) இருந்தார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக! அந்தஸ்தை உயர்த்துவானாக!

தொழுகைக்குப் பிறகு, நான் இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையையும் தொழ வைப்பேன்.

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**